**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.406/2008**

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 பிச்சாண்டி வயது 75, த/பெ சின்னபையன்**

**நேரம் - 1.10**

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் போடப்பட்டுள்ள தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் தம்பிக்குதான் தெரியும். மேற்படி தாவா சொத்து வீட்டு மனையா அல்லது நிலமா என்றால் நத்த மனையாகும், கொல்லையாக இருந்தது. தாவா சொத்து சம்மந்தமாக வாதிகள் ஆகிய எங்கள் நால்வர் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 பட்டா மண்ணு, சின்னபையன் பெயரில் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார்.

2. வாதிகளாகிய நாங்கள் நால்வர் சின்னபையன் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். மண்ணு, சின்னபையன் இருவரும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். மண்ணுவின் வாரிசுதாரர்கள் எங்குள்ளார்கள் என்றால் பெங்களூரில் உள்ளார்கள், ஒரே மகன்தான். மண்ணுவின் மகன் பெயர் என்ன என்றால் கண்ணன், அவர் தற்போது உயிரோடு உள்ளாரா என்றால் இறந்து விட்டார். கண்ணன் என்பவரின் வாரிசுதாரர்கள், 3 ஆண் பிள்ளைகள். பெண் வாரிசுகள் உள்ளனரா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை.

3. கண்ணன் என்பவரின் 3 வாரிசுதாரர்கள் முருகன், குமார், குணசேகரன் என்றால் சரிதான். 2008ம் வருடம் நாங்கள், பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய போது எங்களுடன் முருகன் என்பவரும் சேர்ந்துதான் அனுப்பினார் என்றால் இல்லை. வாதிகளாகிய எங்கள் நால்வருக்கும், மண்ணு வாரிசுதாரர்களுக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பாகம் ஆகவில்லை என்பதற்காகதான் முருகன் என்பவர் எங்களுடன் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்ப வந்தார் என்றால் இல்லை.

எங்களுக்கும், மண்ணு வாரிசுதாரர்களுக்கும் பாகப்பிரிவினை ஆனதா என்றால் ஆனது. எந்த வருடம் பாகப்பிரிவினை நடந்தது என்றால் தற்போது எனக்கு நினைவில்லை.

4. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் எங்களுக்கும், மண்ணு வாரிசுதாரர்களுக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் கோரியுள்ள பரிகாரத்திற்கு மண்ணுவின் வாரிசுதாரர்கள்தான் அவசிய தரப்பினர் என்றால் அவர்கள் பாகம் வேறு, எங்கள் பாகம் வேறு. ஆகையால் மண்ணு என்பவரின் வாரிசுதாரர்களை அவசிய தரப்பினர்களாக சேர்க்காததால் இவ்வழக்கு சட்டப்படி செல்லாது என்றாலும், வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் 1.25**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

SD/- D.V.Koperundevi
District Munsif,
Arni